දුරකථන / தொலைபேசி / Telephone ) 0112669192 ,0112675011 / 0112698507 , 0112694033 / ) 0112675449 ,0112675280
ෆැක්ස් / பெக்ஸ் / Fax ) 0112693866 / ) 0112693869 / )0112692913
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் முகவரி / e-mail )postmaster@health.gov.lk )
වෙබ් අඩවිය / இணையத்தளம் / website ) www.health.gov.lk )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය / எனது இல / My No. ) CF/EXI/01/2024
ඔබේ අංකය / உமது இல / Your No. : )
දිනය / திகதி / Date ) 2024/02/07

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : **02-22/2024**

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை - கொழும்பு

பணிப்பாளர் தேசிய வைத்தியசாலை - கண்டி

மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்.

உரிய திணைக்கள தலைவர்களும்,

**சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு- 2 சேவைத் தொகுதியின் MN - 1- 2006(அ) சம்பள அளவுக்கு உரித்தான பதவிகளுக்கான மூன்றாவது வினைத்திறன் தடைப்பரீட்சை – 2024 (முதலாம் தடவை)**

சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 2 சேவைத் தொகுதியின் **MN - 1 - 2006(A)** சம்பள அளவுக்கு உரித்தான பதவிகளில் தரம் I ற்கு பதவியுயர்வு பெற்று 05 வருடத்திற்குள் சித்தியடைய வேண்டிய மூன்றாவது வினைத்திறன் தடைப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பரீட்சை நடைபெறும் என இத்தால் அறிவிகபபடுகின்றது. தடைப் பரீட்சை **2024/05/12** திகதி ஆங்கில தமிழ் ஆகிய மும் மொழியின் மூலம் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் இடம், நேரம என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள் :-**

விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்கள் சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 02 சேவைத் தொகுதி MN-1-2006 (A) சம்பள அளவுக்கு உரித்தான பதவி ஒன்றில் தரம் I இற்கு உள்ளீர்க்கப்பட்ட **அலுவலர்கள் (ஆண்/பெண் விடுதிக்கட்டுப்பாட்டாளர்), உணவு மேற்பார்வையாளர் (பெண்), வரவேற்பாளர், விடுதி எழுதுநர், வார்ப் துறை உத்தியோகத்தர், மருந்து விநியோக உதவியாளர்கள், விலங்கு தடுப்பு வழங்கள் வெளிக்கள உத்தியோகத்தர்) இதுவரை இப் பரீட்சையில் சித்தியடையாத உத்தியோகத்தர்களும் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.**

03. **வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையிலிருந்து விடுவித்தல்**

சுகாதார அமைச்சின் செயலாளர் 02-90/2015 (ii) பொது சுற்று நிருப கடித இலக்கமுடையதும், **2015.12.23** ம் திகதிய சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய இந்த வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையில் இருந்து விடுவிப்புச் செய்யப்படக் கூடிய உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க தேவையில்லை.

**கவனிக்கவும் : 2024/03/25 திகதிக்கு முன் I ம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரி அனுமதியுடனும் அத்துடன் நியமனக்கடிதமும் கட்டாயம் அனுப்பி வைக்க வேண்டும்.**

04. விண்ணப்பங்கள் :-

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), "சுவசிரிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரிக்கு **2024/03/25** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைகக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் **"MN - 1- 2006(அ) சம்பள அளவுக்கு உரித்தான பதவிகளுக்கான மூன்றாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை – 2024 (முதலாம் தடவை)"** எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைதைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியேகைத்தரும் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.** தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முவரியிடப்பட்ட ரூபா. 110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட"9×4" கடித உறை 01 (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

**விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும்** பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். **முதலாவது பக்கத்தில் 01 - 05 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 06 - 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க கூடியவாறும் இருத்தல் வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிகரிக்கப்படும்.**

05. பரீட்சைக் கட்டணம்

5.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

5.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

06. பரீட்சையின் பொருட்டு உட்படுத்திக் கொள்ளுதல்

6.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

6.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

07. பரீட்சை பாடத்திட்டம்

இப்பரீட்சையானது செயற்பாடு தொடர்பான விஷேட அறிவு எனும் ஓர் கட்டுரை வினாத்தாளைக் கொண்டுள்ளதுடன் அது அலுவலக முறை, நிதிப்பிரமாணம், கணனிப்பரீட்சை, விடய அறிவு ஆகிய நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்த வினாத்தாள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை பாடத்திட்டத்திற்கமைய எல்லா பகுதிகளும் இரண்டு வினாக்கள் வீதம் 08 வினாக்களைக் கொண்டுள்ளது. மொத்தபுள்ளி 100. சித்தியடைவதன் பொருட்டு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நேரம் 02 மணித்தியாலம். ஒவ்வொரு பகுதிகளுக்குமுரிய விடையை வெவ்வேறு விடைத்தாள்களில் எழுத வேண்டும். இதில் ஒரு பகுதியில் இருந்து ஒவ்வொரு வினாவும் கட்டாய வினாவாகும் விரும்பிய 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

08. விடயப்பரப்பு

**A** கீழே **A** யிலிருந்து **D** வரை குறிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பான விஷேட அறிவு எனும் வினாத்தாள் வழங்கப்படும் அலுவலக நிர்வாக முறை

- ❖ தாபன விதிக்கோவை மற்றும் அரச சேவை ஆணைகுழுவின் அலுவலக ஒழுங்கு நடைமுறை விதிகளது கீழ் குறிப்பிடப்படும் அத்தியாயங்களின்படி அமைந்திருக்கும் :-

**தாபனவிதிக் கோவையின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி**

| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் | VII | - | வேதனம் |
| | XII | - | லீவு |
| | XIII | - | புகையிரத ஆணைச்சீட்டு |
| | XIV | - | உள்நாட்டினுள் கடமை தொடர்பிலான பிரயாணம் |
| | XXIV | - | வேதனக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| | XXVII | - | கொடுக்கல் வாங்கல் தொடர்பு வழிமுறைகள் |
| | XXVIII | - | நிர்வாக நடைமுறைகளும் செயன்முறைகளும் |
| | XXXII | - | அரசியல் உரிமைகளைப் பிரயோகித்தல் |
| | XLVII | - | பொது நடத்தைகளும் ஒழுக்காறும் |

❖ **அரச சேவை ஆணைகுழு மற்றும் அலுவலக ஒழுங்குவிதிகள் :-**

| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் | III | - | நியமனங்கள் |
| | V | - | அரசாங்க சேவைக்கு நியமிப்பதற்கு தகுதியற்றவர்கள் |
| | VI | - | நியமனங்கள் தொடர்பான நியதிகள் நிபந்தனைகள் |
| | VII | - | நியமனம் தொடர்பான நடைமுறைகள் |
| | VIII | - | தகுதி கூர் நிலை, செயற்படும் காலம், பதவியில் உறுதிப்படுத்தல் |
| | XIV | - | நியமனத்தை முடிவுறுத்தல் மற்றும் சேவையிலிருந்து இராஜினாமா பெறல் |
| | XV | - | பதவியை வெறிதாக்கல் |

B **நிதி ஒழுங்குவிதிகளின் கீழ்வரும் அத்தியாயங்களின் படி**

| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் | I | - | செலவீடு மற்றும் வருமான மதிப்பீடு |
| | II | - | செலவீடு, பதிவளித்தல், மீளளித்தல் என்பவற்றுக்கான அதிகாரம் |
| | III | - | நிதி முகாமைத்துவம் மற்றும் பொறுப்புடமை |
| | IV | - | பெறுகைகள் |
| | V | - | கொடுப்பனவுகள் |

❖ அரசாங்க பெறுகை நடைமுறைகள்

C **கணனிப் பரீட்சை**

**கீழே குறிப்பிட்டுள்ள இயலுமைகள் விண்ணப்பதாரிகளிடம் உள்ளதா என பரீட்சிப்பது இப்பரீட்சையின் நோக்கமாகும்.**

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை எண்ணக்கரு

அ) கணனி ஒன்றின் அடிப்படை பகுதிகள் மற்றும் அவறடறின் முக்கியத்துவம்

ஆ) வன்பொருள், மென்பொருள்

- i. கணனி முறைமை மென்பொருள் (உ+ம்) இயக்க முறைமை (Operating System)
- ii. பிரயோக மென்பொருள்

இதன் கீழ் எதிர்பார்க்கப்படும் அறிவாற்றல் மற்றும் திறன்

அ) கணனி ஒன்றை சரியான முறையில் இயங்கச் செய்தல் மற்றும் இயக்கத்தை நிறுத்தல்

ஆ) இறுவெட்டு (CD) ஒன்றில் கணனி விபரப்புத்தகம், கணனி கோப்புகள், ஆவணங்கள் என்பவற்றை உள்ளடக்கும் வழிமுறை

இ) புதிய விபரப்பட்டியலை உருவாக்குதல், விபரப் பட்டியல் ஒன்றில் புதிய கோப்பு ஒன்றை உருவாக்கல்,
அழித்தல், பிரதிபண்ணல், கோப்பு ஒன்றின் பிரதியை விபரப்பட்டியல் ஒன்றில் சேர்த்தல், நகர்த்தல், மீளப்பெயரிடல்

ஈ) விபரப் பட்டியல் ஒன்றிலுள்ள கோவைகளின் எண்ணிக்கை, கோவை ஒன்றின் அளவு, கோவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான மென்பொருள், அவற்றை ஆரம்பிப்பதற்கான நாளது வளரப்படுத்துவதற்கான தகவல்களைத் தேடல்.

உ) வடிவமைப்பு (மென்பொருள் ஒன்றை மீண்டும் உருவாக்குதல்)

D **விடய அறிவு** -

இந்த வினாத்தாள் பதவிக்குரிய கடமைகள் தொடர்பில் விடயத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

09. **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல்.

10. இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

கவனிக்கவும் : சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூல சுற்றுநிறுபங்களுக்கிடையே ஏதாவது ஓவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழி மூல சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.

சாமிக ஏச் கமகே

பிரதிப் பணிப்பளர் நாயகம் (நிர்வாகம்)II

செயலாளருக்காக

Chamika H. Gamage
Deputy Director General (Administration)II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

EXI

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

MN -01(Grade I)

**சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 2 சேவைத் தொகுதியின் MN - 1 - 2006 (அ) சம்பள அளவுக்கு உரித்தான பதவிகளுக்கான மூன்றாவது வினைத்திறன் தடைப்பரீட்சை – 2024 (முதலாம் தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( தமிழில்) : ………………………………………………………

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்( ஆங்கில கப்பிற்றல் எழுத்தில்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (தமிழில்): ………………………………………………………

………………………………………………………………………………………………………

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) i பதவி : ………………………………………………………………………………………

ii தரம் I ற்கு நியமிக்கப்பட்ட/பதவியுயர்த்தப்பட்ட / உள்ளீர்ப்பு செய்யப்பட்ட திகதி…………………

கடித இலக்கம் : ………………………………………………………………………………

iii தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ………………………………………………………

iv. மின்னஞ்சல் முகவரி: ………………………………………………………………………

v தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

vi தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் (தமிழில்) ………………………………………………

(ஆங்கிலத்தில்) ………………………………………………………

(ஆ) அதற்குரிய மாவட்டம் : ……………………………………………………………………

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது

மத்திய அரசினால் ☐

மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம்………………………………………………………

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட "9×4" அளவு ரூபா. 110.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 01 இணைக்கப்பட்டுள்ளதா?

………………………………………………………………………………………………

03. (ஊ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்) : ………………………………………………………

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ……………………………………

04. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ………………………………

05. (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ………………………………………………

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ……………………………

முத்திரைக் கூண்டு

06 **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா 25.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) **சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக** நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ........................ .......................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் I ற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .......................... ...............................................

பெயரும் கையொப்பமும், திகதியும்.

---

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ................................................ என்பவர் ................................ உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ........................ ......................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

---

09. **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ............................. என்பவர் ......................... உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ........................... ......................................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /
விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.